**JAMAL MOHAMED COLLEGE(Autonomous)**
**TIRUCHIRAPPALLI 620 020**

**Department of Visual Communication**
**B.Sc., Visual Communication**

# Graphic Design

## What is portfolio? - கிராஃபிக் வடிவமைப்பு மற்றும் புகைப்பட துறையில் போர்ட்ஃபோலியோ என்றால் என்ன? எப்படி தயார் செய்தல்

**கிராஃபிக் வடிவமைப்பு மற்றும்**
**புகைப்பட துறையில்**
**போர்ட்ஃபோலியோ என்றால் என்ன? எப்படி தயார் செய்தல்.**

**முனைவர். இரகுநாதன், உதவி பேராசிரியர்**
**Dr. Ragunathan, Assistant Professor**



**போர்ட்ஃபோலியோ என்றால் என்ன?**

நீங்கள் ஒரு வாடிக்கையாளரிடம் அல்லது நிறுவனத்திடம் உங்கள் வரைகலை அனுபவங்கள் மற்றும் உங்கள் திறமையை நிரூபிக்க இந்த போர்ட்ஃபோலியோ முக்கிய பங்கு வகுக்கின்றது. அவவாறு அவர்களிடம் தொடர்பை ஏற்படுத்தும் போது, பெரும்பாலும் அவர்கள் பார்க்க விரும்பும் முதல் விஷயம் உங்களின் திறமையை இதை காட்டுவது உங்கள் போர்ட்ஃபோலியோவாகும்.

நீங்கள் உங்கள் துறையிலும் மற்றவர்களிடம் காண்பிக்க போதுமான வரைகலை அனுபவம் இல்லை என்றால் கவலைப்படாமால் போர்ட்ஃபோலியோவை உருவாக்க வேண்டும். உங்களின் தனித்திறமையின் அடிப்படையில் பல்வேறு மென்பொருள் உதவியுடன் போர்ட்ஃபோலியோவால் அதிக கவனத்தை ஈர்க்கலாம். இதனால் விருப்பங்கள், ஒவ்வொன்றும் வேறுபட்ட சிந்தனையுடன் நேரம் பார்க்காமல் அர்ப்பணிப்புடன் நன்மைகளை பெறலாம். இதனை சரியாக விளம்பரப்படுத்திக் கொள்ள பயன்படுத்திக்கொள்கின்றனர் இதனை போர்ட்ஃபோலியோ என்றும் இங்கு குறிப்பிடலாம்.

**நிறுவன புகைப்பட போர்ட்ஃபோலியோ**

பல நிறுவனங்கள் தங்கள் முந்தைய வேலைகளை அடிப்படையாகக் கொண்ட ஒரு போர்ட்ஃபோலியோவை தயார் செய்து பல வேலைகளை பெறுகின்றனர். கற்பனை

மிகுந்த வடிவமைப்பாளரைத் தேர்ந்தெடுத்து மற்றும் அந்த வேலை எவ்வாறு வழங்ககலாம் என்று யோசித்து அதன் மூலம் தயார்செய்கின்றனர்.

**புகைப்படக்கலைஞர் போர்ட்ஃபோலியோ**

புகைப்படக்கலைஞர்களுக்கு இது முக்கியமான ஒன்றாக இருக்கின்றது உங்கள் போர்ட்ஃபோலியோ மிகவும் முக்கியமான வணிக கருவியாக பயன்படுகின்றது. சிறந்த புகைப்படங்களைத் தொகுத்து, தேர்ந்தெடுத்து, அவற்றை தொகுத்து பல்வேறு நிறுவனங்களுக்கு கொண்டு சென்று காட்டவும் அனுப்பத் தொடங்கும்முன் போர்ட்ஃபோலியோவிற்கு ஏற்றவாறு புகைப்படங்களை உருவாக்க வேண்டும் . மிக உயர்ந்த தரமான புகைப்படங்களை மட்டுமே கைப்பற்றும் திறன் கொண்ட உயர்தர கேமரா டிஜிட்டல் சிங்கள் ரெபிளேஸ்சன் லென்ஸ் பயன்படுத்தி படங்களை சேகரிக்க வேண்டும்.

**புகைப்பட குறுவட்டு போர்ட்ஃபோலியோ**

புகைப்பட குறுவட்டு என்பது புகைப்படங்களை ஒரு குறுவட்டுக்கு டிஜிட்டல் மயமாக்குவதற்கும் சேமிப்பதற்கும் கோடக் வடிவமைத்த ஒரு அமைப்பு என்று வரையறுக்கலாம். இது படங்களை மட்டுமல்லாமல் ஆடியோவையும் பதிவுகள் செய்யவும் பயன்படுத்துகின்றோம்.

**வலைதள மற்றும் இணைய போர்ட்ஃபோலியோ**

பெருநிறுவனங்கள் புகைப்பட போர்ட்ஃபோலியோவை உருவாக்கி முக்கியமான வணிக கருவியாக பயன்படுகின்றனர். புகைப்பட வலைத்தளம், இணையத்தளம் மற்றும் இணைய பக்கங்கள் ஆகியவற்றை பகிர்ந்து தங்கள் முதல் வாடிக்கையாளர்கள் பெற இது உதவுகின்றது இதை நிறுவன புகைப்படபோர்ட்ஃபோலியோ என்றழைக்கப்படுகின்றது. இவ்வாறு பற்றிய தகவல்களை போர்ட்ஃபோலியோ மூலம் வெளியே விடுகின்றனர்.

**வரைகலை கலைஞர் போர்ட்ஃபோலியோ**

வரைகலை கலைஞர் தங்கள் உருவாக்கிய லோகோ (சின்னங்கள் ), போஸ்டர்கள் மற்றும் பல்வேறு வேலைகளை கணினி மூலம் செய்து அதை பதிப்பில் கொடுத்து உங்களுக்கு ஏற்றவாறு உருவாக்குவதும் மற்றும் வாடிக்கையாளர்களிடம் காட்டுவதற்கும் பயன்படுத்தலாம்.

**விளம்பர கலை போர்ட்ஃபோலியோ**

புகைப்பட, வரைகலை, மற்றும் விளம்பத்துறையில் வேலை வாய்ப்பினை பெற மற்றும் நீங்கள் நிறைய நேரத்தையும் முயற்சியையும் செலவிட வேண்டும். கடின உழைப்பு மற்றும் நீங்களே நிலையான வேலை பெற இந்த போர்ட்ஃபோலியோவை உருவாக்கி வெற்றி பெற வேண்டும்.

நன்றியோடு அன்பு நண்பன்
**பேரா முனைவர். இரகுநாதன், உதவி பேராசிரியர்**